بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 26/05/2023 அன்று U.K. - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# உண்மையான இஸ்லாமிய கிலாஃபத்திற்கு உள்ள இறை ஆதரவைப் பிரதிபலிக்கக்கூடிய, ஈமானுக்கு வலுவூட்டும் சில சம்பவங்களின் எடுத்துரைப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அன்னார் இவ்வுலகிலிருந்து விடைபெறும் நேரம் நெருங்கி விட்டது என்ற செய்தியைத் தெரிவித்தபோது, அன்னார் ஜமாஅத்தைப் பார்த்து கூறினார்கள்:

“அல்லாஹ் இரு விதமான வல்லமையை வெளிப்படுத்துகிறான். முதலாவதாக, நபிமார்களின் கைகளாலேயே தனது வல்லமையின் கரத்தைக் காட்டுகின்றான். இரண்டாவதாக, நபியின் வஃபாத்திற்குப் பிறகு, துன்பங்களை எதிரிடும் நிலை உருவாகிறது. எதிரிகள் வலுப்பெற்று, இப்போது பணி சீர்குலைந்து விட்டது என கருதுகின்றனர். இனி இந்த ஜமாஅத் அழிந்துவிடும் என உறுதியாக நம்புகின்றனர். ஜமாஅத் மக்களும் கூட கலக்கத்தில் மூழ்கி விடுகின்றனர். அவர்கள் துணிவிழந்து விடுகின்றனர். பேறிழந்த பலர் மார்க்கத்தை விட்டு விலகும் வழியை மேற்கொண்டு விடுகின்றனர்.

அப்போது இறைவன் இரண்டாவது முறையாக தனது மகத்தான வல்லமையை வெளிப்படுத்துகிறான். வீழ்ந்து கொண்டிருக்கும் ஜமாஅத்தை சீர்தூக்கி விடுகிறான். எனவே, கடைசிவரை பொறுமையுடன் இருப்பவர் இறைவனின் இந்த அற்புதத்தைக் காண்கிறார். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் இவ்வாறே நடந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் ஒரு அகால மரணமாக கருதப்பட்டது. காட்டுவாசிகளான பல அறிவீனர்கள் மார்க்கத்தை விட்டு வெளியேறி விட்டனர். நபித்தோழர்களும் துக்கம் தாளாமல் பித்து பிடித்தவர்களைப் போன்று ஆகி விட்டார்கள்.

அப்போது இறைவன் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களை நியமித்து, மீண்டும் தனது வல்லமையின் முன்மாதிரியைக் காட்டினான். இஸ்லாத்தை அழியவிருந்த நிலையில் இருந்து தாங்கிப் பிடித்து விட்டான்.

وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا

அதாவது, ‘அச்சத்திற்குப் பிறகு, நாம் மீண்டும் அவர்களை உறுதியாக நிலைநிற்கச் செய்து விடுவோம்’ என்ற தனது வாக்குறுதியை நிறைவேற்றினான்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் காலத்தில் இவ்வாறே நடந்தது. அன்னார் இஸ்ரவேலர்களை (அவர்களுக்கு அளிக்கப்பட்ட) வாக்குறுதிக்கேற்ப கொண்டு சேர்க்க வேண்டிய இலக்கை அடைவதற்கு முன்பே, எகிப்திற்கும் கன்ஆன் தேசத்திற்கும் இடைப்பட்ட வழியில் மரணித்து விட்டார்கள். அப்போது இஸ்ரவேலர்களுக்குப் பெருந்துயரம் ஏற்பட்டது. அவர்கள் நாற்பது நாள்கள் வரை அழுது கொண்டிருந்தனர்.’’

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

‘‘இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். அது வருவது உங்களுக்குச் சிறந்ததாகும். ஏனெனில், அது நிரந்தரமானது. அதன் தொடர் மறுமை வரை அறுபடாது. மேலும், நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால், நான் சென்று விடும் போது இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்பி விடுவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இது குறித்து இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யாவில் உள்ளது.’’

ஆக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வஃபாத்தான போது, அல்லாஹ் தன்னுடைய வாக்குறுதிகளுக்கு ஏற்ப, ஜமாஅத்தை ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்களின் கையில் ஒன்றிணைத்தான். அஞ்சுமனின் கையில் நிர்வாகம் இருக்க வேண்டும் என்று சில மக்கள் விரும்பினர். ஆனால், அன்னார் தம்முடைய இரும்புக் கரங்களால் அந்தக் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

பிறகு, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கிலாஃபத் அரியணையில் அமர்ந்தார்கள். அந்த சந்தர்ப்பத்திலும் நயவஞ்சகர்கள் ஜமாஅத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்தனர். ஆனால், அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களின் ஜமாஅத்தை ஒரு கையில் ஒன்றிணைத்து விட்டான். எதிரிகள் தோல்வியைத் தழுவினர்.

அன்னாரின் மறைவுக்குப் பிறகு மூன்றாவது கிலாஃபத் காலகட்டம் ஆரம்பமானது. அதற்குப் பிறகு நான்காவது கிலாஃபத் காலகட்டம் ஆரம்பமானது. அதற்குப் பிறகு - *ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மிகவும் பணிவுடனும் தன்னடக்கத்துடனும் கூறினார்கள்*: அல்லாஹ் என்னை இந்த இடத்தில் நிறுத்தி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்திருந்த வாக்குறுதிகளுக்கு ஏற்ப, ஜமாஅத்தை முன்னேற்ற பாதைகளில் இட்டுச் சென்றான்.

எதிரி (ஜமாஅத்தில்) பிரிவினையை உண்டாக்குவதற்கு எண்ணற்ற முயற்சிகளை செய்தான். அஹ்மதிகள் ஷஹீத் ஆக்கப்பட்டனர். அவர்களுக்கு உலகப் பேராசைகள் ஊட்டப்பட்டன. ஆனால், அல்லாஹ் உலகம் முழுவதும் உள்ள அஹ்மதிகளை ஈமான் மற்றும் உறுதியான நம்பிக்கையில் அதிகரிக்கச் செய்து கொண்டே இருந்தான்.

அஹ்மதிகளுக்கு கிலாஃபத்துடன் உள்ள தொடர்பை அல்லாஹ்வால் மட்டுமே உருவாக்க முடியும். ஜமாஅத் மக்களுக்கு கிலாஃபத்துடனும், காலத்தின் கலீஃபாவுக்கு ஜமாஅத்துடனும் இருக்கின்ற, இப்படிப்பட்ட அன்பு மற்றும் கலப்பற்ற தன்மையின் தொடர்பை உருவாக்குவதற்கான ஆற்றல் எந்த மனிதரிடமும் இல்லை. நான் எந்த நாட்டுக்குச் சென்றாலும் அங்கு இந்தக் காட்சிகள் காணக் கிடைக்கின்றன. இவை வெறும் கூறக்கூடிய விஷயங்கள் அல்ல. அதற்கும் மேற்பட்டு, இன்றைய நாள்களிலோ கேமராவின் கண் இவற்றைப் பாதுகாத்து வைத்து விடுகிறது. MTA இந்தக் காட்சிகளைக் காட்டிக் கொண்டே இருக்கிறது. அவற்றைப் பார்த்து எதிரிகளும், அல்லாஹ்வின் செயல் ரீதியான சாட்சி உங்களுடன் இருக்கிறது என்று கூறும் நிர்பந்தத்திற்கு ஆளாகி விட்டனர்.

பிறகு, எனக்கு வருகின்ற ஆயிரக்கணக்கான கடிதங்களும் (மக்களுக்கு) கிலாஃபத் மீது இருக்கும் அன்பையும் நன்றியுணர்வையும் பறைசாற்றுகின்றன. **அல்லாஹ் எவ்வாறு தானே மக்களை கிலாஃபத்துடன் இணைக்கின்றான், எவ்வாறு அவர்களுடைய உள்ளங்களில் கிலாஃபத் மீது அன்பை உருவாக்கி விடுகின்றான் என்பவை தொடர்பான சில கடிதங்களின் மாதிரிகளை உங்கள் முன் வைக்கிறேன்.**

**தன்ஸானியா**வின் ஒரு முஅல்லிம் எழுதுகிறார்: ஒருநாள் லுஹர் தொழுகைக்கு முன்பு பள்ளியின் படிக்கட்டில் ஒரு பெண்மணியைப் பார்த்தோம். அவர் - ஜமாஅத் அல்லாதவர்களிடம் ஓதி ஊதும் வழிமுறை இருப்பது போன்று - துஆ செய்ய வைக்க வந்திருப்பதாகக் கூறினார். எவ்வாறாயினும், நாம் அவருக்கு ஜமாஅத்தின் போதனைகளைத் தெரியப்படுத்தினோம். துஆவும் செய்து வைத்தோம்.

அந்தப் பெண்மணி, ‘எனக்கு கனவுகள் வருகின்றன. அவற்றில் நீளமான தாடியை உடைய ஒருவர் எனக்கு மார்க்கத்தைப் புரிய வைக்கிறார்’ என்று கூறினார். இதைக் கேட்டு, அவருக்கு அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் மற்றும் கலீஃபாக்களின் புகைப்படங்கள் காட்டப்பட்டன. அந்த பெண்மணி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகைப்படத்தைப் பார்த்து இந்த சான்றோர் தான் எனது கனவில் வருகிறார்கள் என்று கூறினார்.

**இந்தோனேஷியா**வின் ஒரு பகுதியில் வசிக்கக்கூடிய அப்துல்லாஹ் சாஹிப் அவர்களுக்கு ஜமாஅத்துடன் தொடர்பு இருந்தது. நம் மிஷனரிக்கு அருகில் இருந்ததன் காரணமாக எதிரிகள் அவர் மீது அவதூறு சுமத்தினர்.

இவரைத் தமது பள்ளிவாசலுக்குக் வரவிடாமல் தடுத்து விட்டனர். அவர், 'அழித்துவிடக்கூடிய ஒரு நீர்ச்சுழலில் தான் சிக்கிக் கொண்டதாக கனவு பார்த்தார். அதற்குப் பிறகு, அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகைப்படத்தைப் பார்த்து, 'இந்த சான்றோர்தான் என்னை அந்த நீர்ச்சுழலில் இருந்து காப்பாற்றினார்' என்று கூறினார்.

அவர் மகனும் கனவு பார்த்திருந்தார். அதற்குப் பிறகு, ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் புகைப்படம், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் புகைப்படம் மற்றும் என்னுடைய புகைப்படம் ஆகியவற்றைப் பார்த்து, 'இவர்கள் அனைவரும் தான் என்னைக் காப்பாற்றினார்கள்' என்று கூறினார். பிறகு, அப்துல்லாஹ் சாஹிப் தம் குடும்பத்துடன் பைஅத் செய்து விட்டார்.

**மாலீ** நாட்டின் ஒரு பெண்மணி அஹ்மதி ஆவதற்கு முன்பு கனவில் இரண்டு குரல்களைக் கேட்டு வந்தார். ஒன்று (என்) திலாவத்தின் ஓசை. இரண்டாவது அங்குள்ள முபல்லிஃக் சாஹிப் அவர்களின் ஓசையாகும். ஜமாஅத்தின் ரேடியோவில் எனது குத்பாவையும் இதர நிகழ்ச்சிகளையும் கேட்ட போது, 'இதே குரல்கள் தான் எனக்குக் கேட்டன' என்று கூறி பைஅத் செய்து விட்டார்.

**கேமரூன்** நாட்டின் ஓர் இளைஞர் கூறுகிறார்: 'சில ஆண்டுகளுக்கு முன்பு நான் கனவில் இரண்டு சான்றோர்களைப் பார்த்தேன். சில நாள்களுக்குப் பிறகு சந்தையில் ஓர் இளைஞனை ஜமாஅத்தின் பிரசுரங்களை விநியோகம் செய்யக் கண்டேன். அப்போது அந்த பிரசுரங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகைப்படம் இருந்தது. இதை நான் கனவில் பார்த்திருந்தேன்.

ஜமாஅத்துடன் தொடர்பு கொண்டேன். இலக்கியங்களைப் படித்தேன். அந்த மற்றொரு புகைப்படமும் எனக்குத் தென்பட்டு விட்டது. அது தற்போதைய கலீஃபா அவர்களின் படமாகும். அவர்கள்தான் கனவில் என்னைத் தொழ வைக்குமாறு கூறினார்கள். நான் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, எங்கள் பகுதியின் தலைவர் மரணித்து விட்டார். அப்போது நான் அந்தப் பகுதியின் தலைவராக ஆக்கப்பட்டேன். 'இந்த அனைத்து பரக்கத்துகளும் எனக்கு ஜமாஅத்தில் இணைந்ததன் காரணமாகவே கிடைத்தன' என்று அவர் கூறுகிறார்.

**கினீபஸாவோ**வைச் சேர்ந்த பெண்மணி ஆயிஷா மாரியா சாஹிபா அவர்களின் இரண்டு மகன்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஆயிஷா சாஹிபா அவர்களின் அண்ணன் ஜமாஅத்திற்கு எதிரியாவார். இவர்களின் குடும்பத்தைப் பராமரித்து வருகிறார். அவர், 'அஹ்மதிய்யத்தை விடவில்லை என்றால், எனக்கு உங்களுடன் எந்தத் தொடர்பும் இருக்காது' என்று எச்சரித்தார். இவர்களின் மகன்கள், 'எங்களுக்கு அல்லாஹ்

போதுமானவன். நாங்கள் அஹ்மதிய்யத்தை விடமாட்டோம்' என்று கூறினார்கள்.

இரண்டு நாள்களுக்குப் பிறகு இவர்களின் கனவில், வெண்ணிற ஆடையை அணிந்திருந்த, வெள்ளைத் தாடியைக் கொண்டிருந்த நபர் இவர்களிடம், 'கவலைப்படாதீர்! உம் மகன்கள் அனைவரையும் விட மேலோங்குவார்கள்' என்று கூறினார். பொழுது புலர்ந்ததுமே இவர்கள் நம் மிஷினரீயிடம் சென்றார்கள். என்னுடைய புகைப்படத்தைப் பார்த்து இதே சான்றோர் தான் (கனவில் வந்தார்கள்)' என்று கூறினார்கள். பைஅத் செய்த பிறகு, இவர்கள் மிகவும் துடிப்புடன் செயல்படும் அஹ்மதியாக இருக்கிறார்கள்.

**கென்யா** நாட்டின் பாட்டி (Bhaatti) என்ற ஒரு பகுதியில் பெரும்பாலும் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். ஒருநாள் ஜமாஅத்திற்கு எதிரான மனப்பாண்மை கொண்டிருந்த முஹம்மத் அப்தீ என்பவர் நம் தொழுகை மையத்துக்குத் தொழ வந்தார். அவருக்கு ஜமாஅத்தைப் பற்றி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. சில நாள்களுக்குப் பிறகு முஅல்லிம் சாஹிப் அவர்களின் தங்கும் இடத்திற்கு வந்தார். அப்பொழுது MTA வில் எனது குத்பா போடப்பட்டிருந்தது. குத்பா முடிவடைந்த பிறகு, பைஅத் செய்யப் போவதாக கூறினார்.

காரணம் கேட்டதற்கு அவர் கூறினார்: 'கடந்த இரவு கண் விழித்தபோது முற்றத்திற்குச் சென்றேன். அப்பொழுது விண்ணில் ஒளிமிக்க ஒன்றைப் பார்த்தேன். அது என் மீது ஆழமான தாக்கத்தையும், மதிப்பச்சத்தையும் ஏற்படுத்தியது. இப்பொழுது இந்த குத்பாவைப் பார்த்ததும், இரவு கண்ட படம் (சிந்தனையில்) முழுமை அடைந்தது. எனவே, முழு குடும்பத்துடன் ஜமாஅத்தில் இணைந்து விட்டேன்.'

**சியரா லியோன்** நாட்டிலிருந்து இப்ராஹீம் என்ற ஒரு நபர் MTA வில் என்னுடைய குத்பாக்களைக் கேட்டார். பிறகு அவர் வெளிப்படையாக இவ்வாறு கூற ஆரம்பித்து விட்டார்: 'மவ்லவிகளின் போதனை பொய்யானது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் தமது குத்பாவில் திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் சான்றுகளை எடுத்துரைப்பதை நானே கேட்டிருக்கிறேன். அவர்களின் கலிமாவும் அதேதான். எனவே, அஹ்மதிய்யா ஜமாஅத் பொய்யான ஜமாஅத்தாக இருக்க முடியாது'. பிறகு, அவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்.

**காங்கோ கின்ஷாசா**வில் அஹ்மத் சாஹிப் தன் குடும்ப உறுப்பினர்கள் எட்டு பேருடன் பைஅத் செய்தார். தப்லீஃகும் செய்ய ஆரம்பித்தார். அதன் விளைவாக 62 பேர் அஹ்மதிகளாக ஆகி விட்டார்கள். இவர்கள் அஹ்மதி ஆனதற்கு மிகப் பெரிய காரணமாக அமைந்தது, காலத்தின் கலீஃபா அவர்களும், கிலாஃபத் அமைப்பும் ஆகும். அதற்குப் பிறகு, இவர்கள் தப்லீஃக் செய்ததாலும் ஜமாஅத் மிகவும் அதிகரித்தது.

**காங்கோ கின்ஷாசா**வின் அமீர் சாஹிப் எழுதுகிறார்கள்: காங்கோவில் ஜமாஅத்தின் ரேடியோ ஸ்டேஷன் மட்டுமல்லாமல், 23 உள்ளூர் ரேடியோ ஸ்டேஷன்களில் தப்லீஃக், தர்பிய்யத் நிகழ்ச்சிகள் மற்றும் ஜுமுஆ பேருரை ஆகியவை ஒளிபரப்பப்படுகின்றன. உள்ளூர் கிறிஸ்துவ டாக்டர் ஒருவர், 'நான் முறையாக ஜுமுஆ குத்பாவைக் கேட்கிறேன். நீங்கள் உள்ளூர் மொழியிலும் இதை மொழியாக்கம் செய்ய வேண்டும் என்று உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு அதிகதிகமான மக்கள் இதிலிருந்து பயன் பெறுவார்கள்' என்று கூறினார். இவ்வாறு அல்லாஹ் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறான்.

**ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் டிரினிடாட், கிர்கிசுத்தான், பரகுவை மற்றும் வங்காள தேசம் ஆகிய நாடுகளின் சம்பவங்களையும் எடுத்துரைத்தார்கள்.** பிறகு கூறினார்கள்: ஒரு காலத்தில் (எதிரிகளான) அவர்களுடைய நெஞ்சங்களும் திறக்கும். அவர்கள் அஹ்மதிய்யத்தையும் அடையாளம் கண்டு கொள்வார்கள். கிலாஃபத்தின் அருள்கள் தொடரும்.

இந்த சம்பவங்கள், அஹ்மதிய்யா கிலாஃபத்துடனான அல்லாஹ்வின் ஆதரவுகள் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் வந்து, உலகை ஒரே சமுதாயமாக ஆக்கவிருந்த ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவம் ஆகியவற்றிற்கு சான்று பகர்கின்றன. பாதகமான சூழ்நிலை இருந்தும், அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும்தான் முழு உலகிலும் இஸ்லாத்தின் முன்னேற்றம் மற்றும் தப்லீஃக் -க்கான பணிகளைச் செய்கிறது. இது அல்லாஹ்வின் செயல் ரீதியான சாட்சி பகர்தலுக்கான சான்றாகும்.

அல்லாஹ்வின் வாக்குறுதிகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப, நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் கியாமத் வரை தொடரும், நிரந்தரமாக நிலைபெற்றிருக்கும். எந்த எதிரியும் அதற்கு சிறிதளவும் இழப்பை ஏற்படுத்த முடியாது. எனவே, உங்களது ஈமானை உறுதிப்படுத்துங்கள். உங்களை கிலாஃபத்துடன் இணைத்து வைத்துக் கொள்ளுங்கள். அதற்காக எந்தத் தியாகமும் செய்யத் தயங்காதீர்கள். அல்லாஹுத்தஆலா இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ
اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ
وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)